இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 68 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 01 – ஞாயிற்றுக்கிழமை 18 அக்டோபர் 2026 – வெளியூர் 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 68 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 01 - Sunday 18 October 2026 - Dak 10 Pages ₹ 5.00

இரு தேர்தல் ஆணையர்களின் எதிர்ப்பையும் மீறி அநீதியை முன்னின்று நடத்திய

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரை பதவி நீக்கம் செய்க!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானம்!



சென்னை, அக்.18 -

“இரு தேர்தல் ஆணையர்களின் எதிர்ப்பையும் மீறி அநீதியை முன்னின்று நடத்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி நீக்கம் செய்யப்பட்டு உரிய விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்” என்று நேற்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று (17.10.2026) காலை 11.00 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், கழக அலுவலகத்தில் உள்ள முரசொலி மாறன் கூட்ட அரங்கத்தில் நடைபெற்ற “தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில்” நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு: -

தீர்மானம் - 1

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவிநீக்கம் செய்யப்பட வேண்டும்!

முதன் முதலில் S.I.R. தொடங்கப்பட்ட பீகார் மாநிலத்தில், சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக, அங்குப் பெருமளவில் வாக்காளர்கள் திட்டமிட்டு நீக்கப்படும் செய்திகள் வந்தபோதே, 2025ஆம் ஆண்டு ஜூலை மாதம் அதனைக் கண்டித்துக் குரல் எழுப்பியவர் நம் கழகத் தலைவர் அவர்கள். மேலும், இதனைக் கண்டித்து பீகாரில் “Voter Adhikar Yatra” என்ற பெயரில் நடைபெற்ற வாக்காளர் அதிகாரப் பயணத்திலும் அன்றைய முதலமைச்சரும் கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டார். கழகத் துணைப் பொதுச் செயலாளரும் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி ராஜாத்தி கருணாநிதி அவர்களும் உடன் இருந்தார்.

இதனையடுத்து, தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்களில் “S.I.R. சிறப்பு தீவிரத் திருத்தம்” என 27.10.2025 அன்று தேர்தல் ஆணையம் அறிவித்தவுடன் “சதி வலையைத் தமிழ்நாட்டிலும் விரிக்கத் தயாராகி விட்டது பா.ஜ.க.” எனச் சுட்டிக்காட்டி போர்க்கொடி உயர்த்தியவர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்பதை இக்கூட்டம் பெருமிதத்துடன் பதிவு செய்கிறது.

“பருவமழை மற்றும் பண்டிகைக் காலமான நவம்பர், டிசம்பரில் SIR பணிகளை மேற்கொள்வது சாத்தியமற்றது” என்பதோடு, “வாக்குரிமைப் பறிப்பைத் தடுப்போம்; வாக்குத் திருட்டை முறியடிப்போம்” எனவும், “இந்த ஜனநாயக படுகொலையை எதிர்த்து தமிழ்நாடு போராடும்; தமிழ்நாடு வெல்லும்” எனவும் நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளிலேயே மிகத் தீவிரமான ஆவேசக் குரல் எழுப்பியது திராவிட முன்னேற்றக் கழகம்தான். ஆளுங்கட்சியாக இருந்துகொண்டே, தேர்தல் ஆணையத்தை தட்டிக் கேட்ட அரசியல் கட்சித் தலைவரும், மாநிலத்தின் முதலமைச்சரும் நம் தலைவரே ஆவார். நாடாளுமன்றத்திலும் நமது உறுப்பினர்கள் SIR மூலம் வாக்குரிமையைப் பறிப்பதை எதிர்த்து தொடர்ந்து குரலெழுப்பி வந்தார்கள்.

உச்சநீதிமன்றத்தில் வழக்கு!

“தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தம்” என இரண்டாவது கட்டமாக SIRஐத் தேர்தல் ஆணையம் அறிவித்த 6 நாட்களில், தமிழ்நாட்டில் 2.11.2025 அன்று கழகத் தலைவர் தலைமையில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, “பீஹாரில் நடைபெற்ற எஸ்.ஐ.ஆர் குளறுபடிகளைக் களையாமல் தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்களில் எஸ்.ஐ.ஆர். கொண்டு வருவது மக்களின் வாக்குரிமையை பறிப்பதாகும்” எனவும், “தேர்தல் ஜனநாயகத்தைக் காப்பாற்றிடத் தமிழ் நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்வது” எனவும் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானம் நிறைவேற்றியதும் தி.மு.க.தான்!

வழக்கு தொடுத்ததோடல்லாமல், “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” என மாமல்லபுரத்தில் பிரமாண்டமான பயிற்சிக் கூட்டத்தைக் கழக நிர்வாகிகளுக்கு நடத்தி, தேர்தல் ஆணையத்தின் அத்து மீறல்களால் தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமை பறிபோய் விடக் கூடாது எனத் தி.மு.க.வை முழு வீச்சில் களத்தில் இறக்கி விட்டுச் செயல்பட வைத்ததையும் யாரும் மறுக்கவோ முடியாது. மறைக்கவோ முடியாது.

SIR–க்கு எதிராகக் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திய தி.மு.க.!

“ஏன் SIRஐ எதிர்க்கிறோம்?” என 9.11.2025 அன்று காணொலி மூலம் கழகத் தலைவர் அவர்கள் விரிவாக விளக்கி, இந்த ஜனநாயக விரோதச் செயலுக்கு எதிராக அனைவரையும் ஒருமுகமாகத் திரட்டி, களத்தில் நிற்க வைத்து, 11.11.2025 அன்று மாநிலம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது தி.மு.க.!

பீகார் தேர்தல் காங்கிரசுக்கு அறிவுறுத்தல்!

இதற்கிடையே, S.I.R. காரணமாகப் பெருமளவில் பாதிக்கப்பட்ட பீகார்

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

அவசரகதியில் நடத்தப்பட்டு, திட்டமிட்டு வாக்காளர்களை நீக்க வழி செய்த

SIR– ஐ முழுமையாக ரத்து செய்ய வேண்டும்!

குடியரசுத் தலைவரிடம் கழக எம்.பி.க்கள் கோரிக்கை மனு அளிக்கத் தீர்மானம்!

சென்னை, அக்.18 -

“கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் அனைத்து மாநிலங்களிலும் தேர்தலுக்கு முன்பாக அவசரகதியில் நடத்தப்பட்டு, திட்டமிட்டு வாக்காளர்களை நீக்க வழி செய்த SIR-ஐ முழுமையாக ரத்து செய்யவேண்டும் என்று கோரி குடியரசுத் தலைவர் அவர்களிடம் நாடாளுமன்ற கழக உறுப்பினர்கள் கோரிக்கை மனு அளிக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:-

தீர்மானம் - 4

உலகின் மிகப்பெரும் ஜனநாயகமாகத் திகழும் இந்தியாவில் தேர்தல்களின் மீதான நம்பிக்கை மக்களுக்கு நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் ஒருதலைப்பட்சமானதாக மாறி வருகிறது.

தேர்தல் குளறுபடிகளைத் தீர்க்கக் கோரி குடியரசுத் தலைவரிடம் மனு

எனவே,

அ) அனைத்து மாநிலங்களிலும் தேர்தலுக்கு முன்பாக அவசரகதியில் நடத்தப்பட்டு, திட்டமிட்டு வாக்காளர்களை நீக்க வழிசெய்த S.I.R. முழுமையாக இரத்து செய்யப்பட வேண்டும். S.I.R.க்கு முந்தைய வாக்காளர் பட்டியலைக் கொண்டே இனி வரும் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். வாக்காளர் பட்டியல் திருத்தம் என்பது மக்களின் வாக்குரிமையை உறுதி செய்வதற்கான நடைமுறையாக இருக்க வேண்டுமே தவிர, வாக்குரிமையைப் பறிக்கும் சதி ஆயுதமாக மாற்றப்படக் கூடாது. போதுமான கால அவகாசமும், வாய்ப்புகளும் தரப்பட்டே இனி அப்படிப்பட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் மீதான நம்பகத்தன்மை கேள்விக் குறி!

ஆ) நாடு முழுவதும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் மீதான நம்பகத்தன்மையும் கேள்விக்குறியாகி உள்ளது. EVMகளில் பதிவான வாக்குகளுக்கும் VVPAT ஒப்புகைச் சீட்டு எண்ணிக்கைக்கும் வேறுபாடுகள் இருப்பது தொடர்ந்து பல இடங்களில் கண்டுபிடிக்கப்படுவது இந்த ஐயத்தை மேலும் வலுப்படுத்துகிறது. இதன் காரணமாகத்தான், VVPAT ஸ்லிப்புகள் முழுமையாக எண்ணப்பட வேண்டுமெனத் திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தன. இந்நிலையில், மக்களுக்குத் தேர்தல்களின் மீதான நம்பிக்கையை மீட்டெடுக்கவும், தேர்தல் முடிவுகள் நியாயமாக அமைந்திடவும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு பதிலாக, பழையபடி வாக்குச்சீட்டு முறையில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.

இ) மேற்சொன்ன இரு கோரிக்கைகளையும் வலியுறுத்தி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி குடியரசுத் தலைவர் அவர்களிடம் தி.மு.கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை மனு அளிப்பார்கள் என இக்கூட்டம் முடிவு செய்கிறது.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.